**செய்தி வெளியீடு எண்:522** **நாள்: 09.08.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (9.8.2017) விழுப்புரத்தில் நடைபெற்ற எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

அன்பின் உருவம், ஆற்றலின் இருப்பிடம், இன்றும் என்றும் என்றென்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்குகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறும் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த மகத்தான விழாவிற்கு
சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!
தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **தனபால்** அவர்களே!
முன்னிலை வகிக்கின்ற மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.**சி.வி.சண்முகம்** அவர்களே!
வரவேற்புரையாற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களே!
கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர்
டாக்டர் **க.காமராஜ்** அவர்களே!
ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **வெ.ஏழுமலை** அவர்களே!
உளுந்தூர் பேட்டை சட்டமன்ற உறுப்பினர்

திரு. **இரா. குமரகுரு** அவர்களே!

கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர்

திரு.**அ. பிரபு** அவர்களே!

வானூர் சட்டமன்ற உறுப்பினர்

திரு.**எம்.சக்ரபாணி** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,

திரு. **திண்டுக்கல் சீனிவாசன்** அவர்களே!

திரு. **செங்கோட்டையன்** அவர்களே!

திரு. **செல்லூரா் ராஜு** அவர்களே!

திரு. **தங்கமணி** அவர்களே!

திரு.**வேலுமணி** அவர்களே!

திரு.**ஜெயக்குமார்** அவர்களே!

திரு. **கே.பி.அன்பழகன்** அவர்களே!

டாக்டர் **வி.சரோஜா** அவர்களே!

திரு. **எம்.சி.சம்பத்** அவர்களே!

திரு. **கே.சி.கருப்பணன்** அவர்களே!

திரு. **ஆர்.காமராஜ்** அவர்களே!

திரு. **ஓ.எஸ். மணியன்** அவர்களே!

திரு. **உடுமலை கே.ராதாகிருஷ்ணன்** அவர்களே!

திரு. **இரா.துரைக்கண்ணு** அவர்களே!

திரு. **கடம்பூர் ராஜு** அவர்களே!

திரு.**ஆர்.பி. உதயகுமார்** அவர்களே!

திரு. **வெல்லமண்டி என்.நடராஜன்** அவர்களே!

திரு. **கே.சி.வீரமணி** அவர்களே!

திரு. **கே.டி.ராஜேந்திர பாலாஜி** அவர்களே!

திரு. **பா.பெஞ்சமின்** அவர்களே!

டாக்டர் **நிலோபர் கபில்** அவர்களே!

திரு. **எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்களே!

திரு. **எம்.மணிகண்டன்** அவர்களே!

திருமதி. **வி.எம்.ராஜலட்சுமி** அவர்களே!

திரு. **ஜி.பாஸ்கரன்** அவர்களே!

திரு.**சேவூர் எஸ்.இராமச்சந்திரன்** அவர்களே!

திரு. **பி. பாலகிருஷ்ணா ரெட்டி** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா

திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர்

திருமதி **பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்

திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர்

முனைவர் **இல.சுப்பிரமணியன்** அவர்களே!

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணைய தலைவர்

திரு. **கே.ஜி.பி. ஞானமூர்த்தி** அவர்களே!

தலைமைக் கழக நிர்வாகிகளே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கூட்டுறவு சங்க நிர்வாகிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற

கழகத் தொண்டர்களே!

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

இளைஞர்களே! மாணவ மாணவிகளே!

நலத்திட்டப் பயனாளிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களைப்பற்றி பேசுவது என்றால்
எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பேசுவது? எந்த ஆற்றலைப்பற்றிப் பேசுவது?
எட்டுத்திசைகளையும் வென்ற எட்டாவது வள்ளல்
புரட்சித்தலைவர், பொன்மனச்செம்மல் அவர்கள்
பள்ளிக்கு செல்லும் வயதில்
வறுமையின் காரணமாக,
அரிதாரம் பூசி நாடகத்தில்
நடிக்கத் தொடங்கினாரே! அதைப்பற்றியா?
திரையுலகில் முடிசூடாமன்னனாக
புகழின் உச்சியில் இருந்தாரே!
அதைப்பற்றியா?
அரசியல் வரலாற்றில் யாராலும் அசைக்க முடியாத முதலமைச்சராக, மன்னாதி மன்னனாக,
தமிழ்நாட்டின் வெற்றித் திலகமாக திகழ்ந்தாரே!
அதைப்பற்றியா? எதைப்பற்றிப் பேசுவது?
என்ற பிரமிப்பு எனக்கு ஏற்படுகிறது.
மாண்புமிகு புரட்சித்தலைவர் பற்றி
எதைப் பேசினாலும் மாதக்கணக்கில் பேசலாம்.
அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரம் போல அவ்வளவு அரிய செய்திகள்
மாண்புமிகு புரட்சித்தலைவரின் வாழ்க்கையிலே
பொதிந்து கிடக்கின்றன.

புரட்சித்தலைவர் அவர்களுடைய வாழ்க்கை

ஓர் ஆழமான கடலைப் போன்றது.
அதில் மூழ்கினால் எல்லோருடைய வாழ்க்கைக்கும்
தேவையான விலை மதிப்பற்ற முத்தான
படிப்பினைகள் கிடைக்கும்.
என்னைப் பொறுத்தவரை
புரட்சித்தலைவருக்கு நூற்றாண்டு விழா
எடுக்கிற இந்த இனிய ஆண்டில்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
வாழ்க்கை வரலாற்றில் நான்
பலமுறை மூழ்கியிருக்கிறேன்.
இன்னும் 27 மாவட்டங்களில் 27 முறை
நான் மூழ்க ஆவலோடு இருக்கிறேன்.
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் பல ஆண்டுகள் தமிழ்நாட்டில்
தலைப்புச்செய்திகளாகவே
வாழ்ந்த ஒரு மாபெரும் தலைவர்.

சிலர் வரலாறு படிப்பார்கள்.
சிலர் வரலாறு படைப்பார்கள்.
சிலரில் சிலர்தான் வரலாறாக வாழ்வார்கள்.
ஆனால் புரட்சித்தலைவர் அவர்கள்தான்
வரலாறாகவே இந்தப் பூமிக்கு இறைவனால் அனுப்பப்பட்ட மாமனிதர்.

“தோன்றின் புகழோடு தோன்றுக” என்ற
திருக்குறள் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்
அவர்களுக்காகவே எழுதப்பட்டதோ
என தோன்றும் வகையில்
மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

தோன்றும் போதே புகழோடு தோன்றியவர்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்.
லட்சக்கணக்கான மக்கள் கூட்டத்தில்
புரட்சித்தலைவர் தோன்றினார் என்றால்
அவர் தனியாகத் தெரிவார்.
அவர் புகழ்மட்டுமே அங்கு பேசப்படும்.

**"மாபெரும் சபை தனில் நீ நடந்தால்**
**உனக்கு மாலைகள் விழ வேண்டும்.**
**ஒரு மாற்று குறையாத மன்னவன்**
**இவன் என்று போற்றிப் புகழ வேண்டும்"**
என்று அவருடைய பாடலே அவருக்கு
பொருத்தமாக அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனிச்சிறப்புகள் பல
இருந்தாலும் விழுப்புரம் மாவட்டத்திற்கு என்று
மிகப்பெரிய பாரம்பரியம் இருக்கிறது.
இந்த மாவட்டம் ஆன்றோர்களாலும்
சான்றோர்களாலும் அழகுபடுத்தப்பட்ட
பெருமைப்படுத்தப்பட்ட புகழ்பெற்ற மாவட்டம் விழுப்புரம் மாவட்டம் ஆகும்.

விழி மாநகரம் என்றும்
'நடு நாடு' என்றும் அழைக்கப்பெறுகின்ற
இந்த விழுப்புரம் மாவட்டத்தில் சான்றோர்கள்
பலர் தோன்றியுள்ளார்கள்.
சைவத்தையும் தமிழையும் தழைக்கச் செய்த
சுந்தரமூர்த்தி நாயனார்,
காஞ்சிப் பெரியவர் பரமாச்சாரியார்
சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள்,

கவிச்சக்கரவர்த்தி கம்பனை
ஆதரித்த சடையப்ப வள்ளல்,
ஆசுகவி காளமேகப்புலவர்
போன்ற பல பெரியோர்கள்
பிறந்த புனித மண் இந்த மாவட்டம் ஆகும்.
செஞ்சியை ஆண்ட தேசிங்குராஜன்
இந்த மண்ணுக்குச் சொந்தக்காரரே.

பெரிய புராணம் புகழும் மெய்ப்பொருள் நாயனார்
இப்பகுதியை ஆண்டிருக்கிறார்.
பாரி மகளிரை மணந்த கோப்பெருஞ்சிங்கன்
இப்பகுதியில் 37 ஆண்டுகள் தொடர்ந்து
ஆண்டிருக்கிறார்.
கடையேழு வள்ளல்களில் ஒருவரான
காரி இப்பகுதியை ஆண்டிருக்கிறார்.

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த சென்னை ராஜதானியின்
முதல்வராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்,
திருக்குறள் வி.முனுசாமி,
கவிஞர் உளுந்தூர்பேட்டை சண்முகம்
போன்ற இன்னும் பலர் இந்த மண்ணில் விளைந்த
சான்றோர் பெருமக்கள், இந்த மாவட்டத்திற்கு
புகழைத் தேடித் தந்திருக்கிறார்கள்.

இந்த மாவட்டம் விவசாய பெருமக்கள்,
வணிக பெருமக்கள், தொழிலாளர் பெருமக்கள்,
ஆகியோர் ஒன்று சேர்ந்து
ஒற்றுமையாக வாழும் மாவட்டமாகும்.

மேல்மலையனூர், திருக்கோவிலூர், திருவிடையாறு,
திருவெண்ணைநல்லூர், திருவக்கரை, கூவாகம்
போன்ற ஆன்மீக ஊர்களை உடையது
இந்த மாவட்டம். அதே போல செஞ்சிக் கோட்டை,
கல்வராயன் மலை, மரக்காணம், ரிஷிவந்தியம்
போன்ற ஏராளமான சுற்றுலா இடங்களையும்
தன்னகத்தே கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில்
புனிதமான இந்த மண்ணில் பேசுகிற வாய்ப்பினை
பெற்றதற்கு நான் பாக்கியம் செய்திருக்கிறேன்.
இந்த அரிய வாய்ப்பை எனக்கு வழங்கி
உங்களையெல்லாம் சந்திப்பதற்கு வாய்ப்பளித்த
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு
இந்த நேரத்தில் நான் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றேன்.
நான் இந்த நிலையை எட்டியதற்கும்,
இந்த மாவட்டம் உருவானதற்கும்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்கள்தான் காரணம்.

ஆங்கிலேயர் ஆட்சியில் பாலாற்றுக்கு வடக்கில்
இருப்பது வட ஆற்காடு மாவட்டமாகவும்,
தெற்கில் இருப்பது தென் ஆற்காடு
மாவட்டமாகவும் உருவாக்கப்பட்டது.
பின்னர் தென்ஆற்காடு மாவட்டத்தில் இருந்து
**1993**ம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் புதிய
மாவட்டமாக உருவாக்கப்பட்டதுதான் இந்த விழுப்புரம் மாவட்டம்.
எனவே, புராண, வரலாற்று பெருமைகள் பல

இந்த மாவட்டத்திற்கு இருந்தாலும்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால்
உருவாக்கப்பட்டதால் இந்த மாவட்டத்திற்கு
தனிச்சிறப்பு ஏற்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் விவசாயத்தை நம்பியிருக்கிறது. அதனால் வேளாண்மைத்துறை சார்ந்த ஒரு சில விவரங்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்யப்படும்
நிலப்பரப்பு 1 இலட்சத்து 71 ஆயிரத்து 478 ஹெக்டேர்
ஆகும். அதாவது மாவட்டத்தில் உள்ள நிலப்பரப்பில்
36.1 சதவிகிதமாகும். மாநில நிலப்பரப்பில்
9.6 சதவிகிதமாகும். ஆனால் நெல் உற்பத்தியின்
அளவு 8 இலட்சத்து 32 ஆயிரத்து 585 டன்னாகும்.
இது மாநில உற்பத்தியில் 10.5 சதவிகிதமாகும்.

இதே போன்று, இம்மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி
செய்யப்படும் நிலப்பரப்பு 79 ஆயிரத்து 709 ஹெக்டேர்
ஆகும். அதாவது, மாவட்ட நிலப்பரப்பில்
16.8 சதவிகிதமாகும். மாநில நிலப்பரப்பில் 30.3 சதவிகிதமாகும். கரும்பு
உற்பத்தியின் அளவு
93,68,212 டன்களாகும். இது மாநில உற்பத்தியில்
33.3 சதவிகிதமாகும்.

அதிக அளவு நெல் மற்றும் கரும்பு உற்பத்தி செய்யும்
மாவட்டம் விழுப்புரம் மாவட்டமாகும் என்பதை
அறிவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.
விழுப்புரம் மாவட்ட விவசாய பெருங்குடி மக்களின்

உழைப்பிற்கு இது ஒரு அளவுகோல்
என்றே சொல்லலாம்!
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
தனது பெரும்பாலான திரைப்படங்களில்
தொழிலாளி கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.
அவற்றில் விவசாயி கதாபாத்திரங்களை
ஏற்று நடிக்கும் போது அவர் உண்மை
விவசாயியாகவே மாறிவிடுவார்.
காரணம் விவசாயத்தின் மீதும்
விவசாயப் பெருங்குடி மக்களின் மீதும்
புரட்சித்தலைவர் அவர்களுக்கு மிகுந்த
அக்கறையும் ஈடுபாடும் இருந்தது.
அதனால் உழவர் பெருமக்களை அதிகமாக கொண்டிருக்கிற விழுப்புரம்
மாவட்டத்தில்
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை
கொண்டாடுவது என்பது மிகவும்
பொருத்தமானதாக நான் கருதுகிறேன்.

மேலும், இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு
ஒரு தகுதியான பெருமை என்னவென்றால்..
நூற்றாண்டு நாயகன் புரட்சித்தலைவர்,
பொன்மனச்செம்மல், எம்.ஜி.ஆர். அவர்களின்
கலை சேவையைப் பாராட்டி
விழுப்புரம் முத்தமிழ் மன்றம்
“கலை அரசர்” என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்தது.
உங்களைப் போன்ற நல்ல உள்ளமுடையவர்கள்
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்கு
வழங்கிய பட்டங்கள்தான், அவரை ஊக்குவித்து
பின்னாளில் தமிழ் நாட்டின் தலைசிறந்த

மனிதராக, தலைவராக, முதலமைச்சராக மாற்றியது.

புரட்சித்தலைவர் வேர் என்றால்
புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
அந்த வேரால் வளர்ந்த கற்பக விருட்சம்.
பரந்து விரிந்து இருக்கின்ற
அந்த கற்பக விருட்ச நிழலில் நாம் அனைவரும்
இப்போது குடியிருக்கிறோம்.
நாளை வரப்போகிற அத்தனை தலைமுறைகளும்
'அம்மா' என்ற கற்பக விருட்ச நிழலில்தான்
குடியிருப்பார்கள்.

புரட்சித்தலைவர் வாழ்ந்த போது வாழ்ந்த
பெரியோர்கள் புரட்சித்தலைவரின்
கலை வாழ்க்கையையும் அரசியல் வெற்றிகளையும்
மலரும் நினைவுகளாக நினைத்துப் பார்க்க வேண்டும்.
தமிழ்நாட்டின் மாபெரும் சக்தியாக
விளங்கிய சாதனைத் தலைவர்களின்
சரித்திரம் இன்றைய தலைமுறையினருக்கு
தெரிந்திருக்க வேண்டும்.

அதற்காகத்தான், இந்த நூற்றாண்டுவிழா
சீரும் சிறப்புமாக மாவட்டம் தோறும்
நடத்தப்பட்டு வருகின்றன.
இந்த விழாவின்மூலம் இளைஞர்கள்,
குழந்தைகள், மாணவ மாணவிகள் புரட்சித்தலைவரை
முன்மாதிரியாக கொண்டு உழைக்க வேண்டும், ஒழுக்கத்தோடு வாழ
வேண்டும்,
பெற்றோரை பாதுகாக்க வேண்டும்,

பெரியோரை மதிக்க வேண்டும்,
தர்மம் செய்ய வேண்டும் என்பதை
உறுதிமொழியாக எடுத்துக் கொள்ள வேண்டும்
என்பதுதான் என் விருப்பம்.
அதுதான் இந்த விழாவிற்கு
கிடைத்த வெற்றியாகும்.

எனவே, நான் தொடக்கத்திலே கூறியதைப்போல
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். என்கிற கடலில்
மூழ்கி எடுத்த முத்துப்போன்ற தகவல்களை
உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

“அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது;
அதனினும் அரிது கூன் செவிடு பேடு நீங்கி
பிறத்தல் அரிது; அதனினும் அரிது புரட்சித்தலைவரைப்போல் பிறத்தல் அரிது;
அதனினும் அரிது அவரைப்போல்
வள்ளலாக வாழ்தல் அரிது;
அதனினும் அரிது அவரைப்போல்
முதல்வராய் ஆள்வதும் அரிது.
அதனினும் அரிது; அவரைப்போல்
மக்கள் மனதில் இருப்பதும் அரிது”

இது முற்றிலும் உண்மையாகும்.
இது உண்மைதான் என்பதற்கு சில
சம்பவங்களை இங்கே எடுத்துக்கூற
நான் கடமைப்பட்டுள்ளேன்.

புரட்சித்தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சராக
பதவியேற்றதும்,

முதலில் மாவட்ட ஆட்சியர்களை தன் அறைக்கு அழைத்துக் கேட்ட முதல் கேள்வி இதுதான்.

“தமிழ்நாட்டில் ஏழ்மையில் எத்தனை பேர்
இருக்கிறார்கள்?
ஏழைகளுக்கான திட்டங்கள்
உங்களிடம் என்ன இருக்கிறது?”
“அந்த திட்டங்களில் விவசாயம், கல்வி, ரேசன், வேலைவாய்ப்பு
ஆகியவற்றிற்கு
முன்னுரிமை இருக்கிறதா?’’ என்பதைத் தான் கேட்டார்.

மாவட்ட ஆட்சியர்கள் வியந்து போனார்கள்.
சில ஆண்டுகள் மட்டுமே பள்ளிக்குச் சென்ற
ஒருவருக்கு மூவேந்தர்களுக்கு இருந்த ஆளுமையும், அறிவும், வீரமும் சேர்ந்து இருந்ததை ...
புரட்சித்தலைவர் ஆட்சிப்பொறுப்பேற்ற
ஆறே மாதத்தில் மக்கள் புரிந்து கொண்டார்கள்.
ஒருமுறை பத்திரிகையாளர்கள்
புரட்சித்தலைவர் அவர்களிடம்
“இந்த ஆறு மாதத்தில் தமிழ்நாட்டிற்கு சொல்லும்படியாக என்ன
செய்திருக்கிறீர்கள்?”
என்று கேட்டார்கள்.
உடனடியாக புரட்சித்தலைவர் பதில் கூறினார்.
இந்த 6 மாதத்தில் மூடப்பட்டிருந்த
8 பஞ்சாலைகளில் 4 ஆலைகள் திறக்கப்பட்டுள்ளன.
இந்த 6 மாதத்தில் மூடப்பட்டிருந்த
153 தொழிற்சாலைகளில், 141 தொழிற்சாலைகள்
இயங்க ஆரம்பித்துவிட்டன.

இந்த 6 மாதத்தில், 28 ஆயிரத்து 440 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு
அவர்களுக்கு அளித்திருக்கிறேன்
என்று ஆறு மாதத்தில் செய்து முடித்த திட்டங்களைப்பற்றி வரிசையாக
தெளிவாக எடுத்துரைத்தார்.
பத்திரிகையாளர்கள் வாயடைத்துப் போனார்கள்.

சமீப காலங்களாக எதிர்க்கட்சிகள்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
வழியில் வந்த தமிழ்நாடு அரசு மத்திய அரசின்
இணக்கப் போக்கை விமர்சித்து அறிக்கைகள்
வெளியிட்ட வண்ணம் இருக்கின்றன.

ஆட்சிக்கு வரும்வரை நான் அரசியல்வாதி;
ஆட்சிக்கு வந்தபிறகு நான் அனைவருக்கும்
பொதுவானவன். நான் எதிர்கட்சி, ஆளுங்கட்சி
என்று பார்ப்பதில்லை. அனைவரும் தமிழ்நாட்டு
மக்கள்தான். அனைவருக்காகவும்தான்
நலத்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன;
என்ற கொள்கையை கொண்டிருந்த
ஒரு மகத்தான தலைவர்
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
முதன்முறை தமிழ்நாடு முதலமைச்சராக
இருந்தபோது அப்போது பாரதப் பிரதமராக
இருந்த திருமதி. இந்திராகாந்திக்கு அவர்களுக்கு ஆதரவாக
இருந்தார். அதன்பிறகு திரு.மொரார்ஜி தேசாய்
பாரதப் பிரதமரானார்.
அவரையும் புரட்சித்தலைவர் ஆதரித்தார்.

அதன்பிறகு திரு.சரண்சிங் பிரதமரானார்.
அவருக்கும் புரட்சித்தலைவர் அவர்கள்
ஆதரவு கரம் நீட்டினார். அதனால்
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரை எதிர்க்கட்சிகள்
கிண்டல் செய்தன. இதுபற்றி பத்திரிகையாளர்கள்
புரட்சித்தலைவரிடம் கேட்டனர்.
அதற்கு "நான் இப்போது தனிப்பட்ட மனிதர் அல்ல;
தமிழ்நாட்டின் முதலமைச்சர்.
மக்களின் நலன்தான் எனக்கு முக்கியம்.
மக்கள் நலத்திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்காக மத்திய அரசுடன்
இணக்கமான சூழ்நிலையை கடைப்பிடிக்கிறேன்.
எதிர்க்கட்சிகளின் விமர்சனம் பற்றி எனக்கு
கவலையில்லை'' என்று தெரிவித்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களின் மனித நேயமிக்க வழியைத்தான்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின்
வழியில் வந்த இந்த அரசு கடைப்பிடிக்கிறது.
எங்களுக்கு மக்கள் நலன்தான் முக்கியம்,
எதிர்க்கட்சிகளின் விமர்சனம் முக்கியமில்லை.

இன்னொரு சம்பவத்தையும் இங்கே
குறிப்பிட விரும்புகின்றேன்.
திரு.ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது
தமிழ்நாட்டு பள்ளிக் குழந்தைகளுக்கு
விலையில்லா சீருடை வழங்க 120 கோடி ரூபாய்
நிதி தேவைப்படுகிறது என டெல்லிக்குச் சென்று
நேரில் கோரிக்கை வைத்தார்.
"பின்னர் பார்க்கலாம்" என திரு.ராஜீவ் காந்தி கூறவே

புரட்சித்தலைவர் அவர்கள் டெல்லி தமிழ்நாடு இல்லத்திற்கு திரும்பிய உடன்,
அரசு அதிகாரிகளிடம் “தமிழ்நாட்டின் நிதி
நெருக்கடியைப் பற்றி மக்களிடம் கூறி
வீட்டுக்கு கொஞ்சம் பணம் பெற்று
நாமே சீருடைத் திட்டத்தை செயல்படுத்துவோம்”
என்றார். ஆனால், அதற்கு அவசியம் ஏற்படவில்லை.
புரட்சித்தலைவர் அவர்கள் மீது இருந்த
மரியாதை காரணமாக பாரத பிரதமர்
புரட்சித்தலைவரை மீண்டும் அழைத்து
சீருடைக்கு மானியம் வழங்க சம்மதித்தார்.
“சிறு வயதில் ஒரு வாய் சோற்றுக்கும்
ஒரு ஜோடி துணிக்கும் எவ்வளவு கஷ்டப்பட்டேன்
என்று எனக்குத்தான் தெரியும்,
அதனால்தான் சத்துணவோடு சீருடையும்
கொடுக்க விரும்புகிறேன்” என்று
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
உருக்கத்தோடு கூறினார்.
‘‘என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு,
நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே
என்னுடைய புனித கடமையாக கருதுகிறேன்.
ஏழை எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை
நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை,’’
என்றார் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி
அம்மா அவர்கள். அதன் அடிப்படையில்தான்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் வந்த அரசு மக்களின்
தேவைகளை விரைந்து பூர்த்தி
செய்கின்ற அரசாக செயல்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பல துறைகள் மூலம்

பல கோடி ரூபாய் செலவில்
மக்கள் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அவைகளை இங்கே வரிசைப்படுத்த நேரமில்லை.
எனினும் ஒருசிலவற்றை இங்கே குறிப்பிட
விரும்புகிறேன்.

- கல்வராயன்மலை, திருநாவலூர் மற்றும் உளுந்தூர்பேட்டையில், 15 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் மாதிரிபள்ளிகள்;
- ஆசிரியர் கல்வி பட்டப்படிப்பிற்காக, 4 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழக கல்வியியல் உறுப்புக் கல்லூரி;
- 7 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டில் மகளிருக்கான புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி;
- பிரதம மந்திரியின் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 763 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரகப்பகுதி, பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் ஏழைகளுக்கு 31,146 வீடுகள்;
- வரலாறு காணாத வறட்சியிலும், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க 56 கோடியே 75 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பீட்டில் 2124 குடிநீர் பணிகள்;

மேலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட
1 லட்சத்து 54 ஆயிரத்து 435 விவசாயிகளுக்கு
நிவாரணத் தொகையாக 79 கோடியே 91 லட்சத்து
9 ஆயிரத்து 853 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஏரிகளின் நீர்வளத்தை அதிகரிப்பதற்காக
குடிமராமத்து பணிகள் திட்டம் என்ற
ஒரு புதிய திட்டம் அம்மாவின்
வழிகாட்டுதலின்படி செயல்படும்
இந்த அரசால் துவக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 808 லட்சம் மதிப்பீட்டில்
101 குடிமராமத்து பணிகள்
செய்து முடிக்கப்பட்டுள்ளன.
மேலும் 92 குடிமராமத்து பணிகளை முடித்திட
1250 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு,
பணிகள் நடைபெற்று வருகின்றன.
விவசாயிகளின் நலன் கருதி
ஏரிகளிலிருந்து கட்டணமில்லாமல்
வண்டல் மண் எடுக்கும் திட்டம்
தற்பொழுது துவக்கப்பட்டுள்ளது.
இதன்படி இதுவரை 1249 ஏரிகளில்
18053 விவசாயிகள் 15 லட்சத்து
35 ஆயிரத்து 704 கன மீட்டர் அளவிற்கு
வண்டல் மண் எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின்
கோரிக்கையை ஏற்று ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பல்வேறு
மாவட்டங்களில் உள்ள ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் அமைத்து
நீர் ஆதாரத்தினை பெருக்குவதற்கு
நடவடிக்கை அம்மா அரசு எடுத்து வருகிறது.

மயிலம்–பேரணி இரயில் நிலையங்களுக்கு
இடையில் மயிலம் ரோட்டில் நெடுஞ்சாலைத் துறையினரால் கட்டப்பட்டுள்ள
இரயில்வே மேம்பாலம்,

சின்ன சேலம் மற்றும் தியாக துருக்கத்தில் ஒருங்கிணைந்த வேளாண்மை
விரிவாக்க மையம் உட்பட 27 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில்
கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்துள்ளேன்.

மேலும் 67 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள
புதிய சட்டக்கல்லூரி உட்பட 859 கோடியே 58 இலட்சம் ரூபாய் பணிகளுக்கு
அடிக்கல் நாட்டியுள்ளேன்.

41 ஆயிரத்து 248 பயனாளிகளுக்கு
784 கோடியே 47 இலட்சத்து 50 ஆயிரத்து 286 ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட
உதவிகள் வழங்கியுள்ளேன்.

இப்படி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின்
வழியில் வந்த அரசு மாநிலத்தின் முன்னேற்றத்தை
மட்டும் குறிக்கோளாகக் கொண்டு
அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறது.
குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்திற்காக
பல்வேறு நலத்திட்டங்கள் மாண்புமிகு
புரட்சித்தலைவி அம்மாவின் அரசால்
மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கர்ப்பிணிப் பெண்களுக்கு
“அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம்”
மற்றும், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு 16 பொருட்கள்
அடங்கிய
“அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்”
வழங்கப்படுகிறது.
இதில் குழந்தையை சிரிக்க வைக்க
‘கிலுகிலுப்பை’ யும் அடங்கும்.
ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம்
என்ற தத்துவத்தினை உறுதி செய்யும் வகையில்
மாண்புமிகு அம்மா அவர்கள்
இப்படி பல திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில்
வரும் இந்த அரசும் தொடர்ந்து
செயல்படுத்தி வருகிறது.

இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர்
சுயநலத்துக்காக எதையாவது பேசி மக்களை
திசை திருப்பி, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதில்
முனைப்புக் காட்டுகிறார்கள்.
அவர்கள் தங்கள் முயற்சியை கைவிட்டு,
மக்கள் பணி ஆற்ற வேண்டும்
என்று கேட்டுக் கொள்கின்றேன்.
இதைக் கூறுகிறபோது எனக்கு ஒரு
கதை நினைவுக்கு வருகிறது.
நாட்டுக்குத் தேர்தல் வருவதுபோல்
வழக்கமாக காட்டுக்கும் தேர்தல் வந்தது.
சிங்கம்தான் அந்த காட்டின் நிரந்தர தலைவர்.
பிற பதவிகளுக்குத்தான் தேர்தல் நடக்கும்.
தேர்தல் பிரச்சாரம் களை கட்டியது.
காட்டு உயிரினங்கள் அதன் பங்குக்கு
தேர்தல் வேலைகளை பார்த்தன.
இணை பிரியாத நண்பர்களாக இருந்த
ஒரு புலியும், நரியும் மட்டும்
தேர்தல் வேலையில் ஈடுபடவில்லை.
சிங்கம் தலைவராக இருப்பதைக் கண்டு
புலிக்குப் பொறாமை.
சூழ்ச்சியால் சிங்கத்தை வீழ்த்த திட்டமிட்டது.
ஒருநாள் நண்பர் நரியிடம், “நரியாரே!
சிங்கத்தின் கறியை ஒரு முறையேனும்
சுவைத்துவிட வேண்டும் என்பது எனது

நீண்டகால, நிறைவேறாத ஆசை.
அதை உன்னால் மட்டுமே நிறைவேற்ற முடியும்.
நிறைவேற்றினால், சிங்கத்திற்கு அடுத்த நிலையில் இருக்கும் நான் உன்னையே
இந்தக் காட்டுக்குத் தலைவராக ஆக்கிவிட்டு, நிம்மதியாக கண்மூடுவேன்”,
என்று உருக்கமாக கூறியது.
புலியின் பேச்சை நம்பிய நரி,
சிங்கத்தை வீழ்த்த யானையை
பயன்படுத்த எண்ணியது.
யானையிடம் சென்று “யானையாரே!
உங்கள் பலம் உங்களுக்குத் தெரியவில்லை.
நியாயப்படி நீங்கள்தான் இந்தக் காட்டுக்குத்
தலைவராக வரவேண்டும்.
நீங்கள் தேர்தலில் நின்றால் நிச்சயம் ஜெயிக்கலாம்,
என்று யானைக்கு ஆசையை ஏற்படுத்தியது.
யானைக்குத் தெரியாமல், நரி சிங்கத்திடம் சென்று,
“தலைவர் பதவிக்கு உங்களை எதிர்த்து யானை
போட்டியிடப் போகிறதாம், இந்த செய்தியை உங்களுக்கு நான் கூறினேன்
என்பது யாருக்கும் தெரிய வேண்டாம்” என்றது.
சிங்கத்திற்கு கோபம் வந்து, அந்தப் பக்கம்
சென்ற கழுதையிடம், நீ உடனடியாக
அந்த யானையை இங்கு அழைத்து வா!
என்று கட்டளையிட்டது.
தன் திட்டப்படி இன்று யானையும் சிங்கமும்
ஒருவரை ஒருவர் தாக்கி மடியப் போகின்றனர்.
சிங்கத்தின் கறியை புலிக்குக் கொண்டுபோய்
கொடுத்துவிட்டு நாம் இந்தக் காட்டுக்கு
தலைவராகிவிடலாம் என்ற எண்ணத்தோடு,

நரி அந்த இடத்தைவிட்டு  நகர்ந்துவிட்டது.

கழுதை ஓடிப்போய் யானையை
சிங்கத்திடம் அழைத்து வந்தது.
நரி தன்னிடம் வந்து சொன்ன செய்தி உண்மையா?
என்று சிங்கம், யானையிடம் கேட்டது.
“என்னை தேர்தலில் போட்டியிடச் சொன்னவனே
நரிதான்” என்று யானை
உண்மையைப் போட்டு உடைத்தது.
நரியின் சூழ்ச்சியை தெரிந்து கொண்ட
சிங்கம் உடனே, அந்தப் பக்கமாக வந்த
காக்கையிடம், “காக்கையாரே!
நரிக்குக் கொடுக்க ஒரு பரிசு வைத்திருக்கிறேன்,
நீ நரியை உடனே இங்கு அழைத்து வா!”
என்றது. காக்கை நரியிடம் சென்று,
சிங்கம் சொன்ன செய்தியைச் சொன்னது.
நரி குழப்பத்துடன் சிங்கத்திடம் வந்தது.
அங்கு யானையும் சிங்கமும் ஒரே இடத்தில்
இணக்கமாக பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்து
நரி அதிர்ச்சியடைந்தது. சிங்கம் ஓடிப்போய்
நரியை தாக்கியது. தப்பித்தோம், பிழைத்தோம்
என்று நரி காயத்துடன் நொண்டியபடியே
புலிஇருக்கும் இடத்திற்கு வந்தது.

“நரியாரே! என்ன நடந்தது?” என்று புலி கேட்டது.
“புலியாரே! உங்கள் ஆசையைத் தீர்த்து வைப்பதற்காக
நான் சிங்கத்திடம் நேருக்கு நேர் மோதினேன்.
சிங்கம் என்னை தாக்கிவிட்டு தப்பித்துவிட்டது’’

என்று சமாளித்தது.

காட்டில் நடந்த இந்தக் கதையைப்போல
நாட்டிலும் பலர் நரியைப் போல
சூழ்ச்சியில் ஈடுபடுகிறார்கள்.
ஒருகாலும் அவர்களுடைய சூழ்ச்சி வெற்றியடையாது.
மற்றவர்கள் ஏற்படுத்தும் குழப்பங்களையும்
சூழ்ச்சிகளையும் கழகத் தொண்டர்கள்
ஓரணியில் நின்று முறியடிப்பார்கள்
என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
நூற்றாண்டு விழாவை நினைவு கொள்ளும்
வகையில் இந்த மாவட்டத்தில் புதிதாக துவக்கப்பட்டுள்ள மகளிர் கலை
மற்றும் கல்லூரிக்கு
“டாக்டர் எம்.ஜி.ஆர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி” என பெயர்
சூட்டப்படும்.

மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில்
கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கம்
“டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கம்”
என அழைக்கப்படும்.

மேலும், நகரப்பகுதியில் அமைந்துள்ள இரயில்வே
கேட்–டால் போக்குவரத்து பெரிதும்
பாதிக்கப்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு
விழுப்புரம்–வெங்கடேசபுரம் இரயில் நிலையங்களுக்கு
இடையில், விழுப்புரம் நகரத்திற்கு செல்லும்
பழைய தேசிய நெடுஞ்சாலை எண் 45–ல்
சாலை மேம்பாலம் அமைக்கும் பணி

துரிதப்படுத்தப்படும்.

இந்த சீர்மிகு விழாவிற்காக உழைத்த
கழகப் பிரதிநிதிகளுக்கும்
கழகத் தொண்டர்களுக்கும்,
பொதுமக்களுக்கும், பலவகையிலும்
ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும்,
காவல்துறையினருக்கும் பாராட்டுக்களையும்,
வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய குழந்தைகள் சிந்திக்கக்கூடிய ஒரே முதலமைச்சர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான். ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து தன் குழந்தைக்கு என்னென்ன செய்யவேண்டுமென்று நினைத்து, நினைத்துப் பார்த்து செய்து கொடுத்திருக்கின்றார். ஆகவே நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, கரு உதிக்கின்றபொழுதே அந்தக் குழந்தை நன்றாக வளர வேண்டுமென்பதற்காக, ரூபாய் 6000–லிருந்து ரூபாய் 12,000 ஆயிரம் வரை கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கினார்கள். ரூபாய் 12,000–லிருந்து ரூபாய் 18,000 ஆயிரம் வழங்கினார்கள். ஆகவே, கரு உருவாகின்றபொழுதுகூட அந்தக் கரு நன்றாக வளர வேண்டுமென்று சிந்தித்து, சிந்தித்து சேவை செய்த தலைவி நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆகவே தான் தெய்வத்திற்குச் சமமாக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை நாம் எண்ணுகின்றோம்.

அதுமட்டுமல்ல, குழந்தை பிறந்த பிறகு, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, 16 வகையான பொருட்களைக் கொடுக்கின்றார்கள். அம்மா பரிசுப் பெட்டகம் பெறுகின்ற குழந்தை அம்மாவினுடைய உதவி பெறுகின்றது என்று சொன்னால், இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டும்தான்,

வேறு எங்கும் கிடையாது. ஆகவே பிறக்கின்ற ஏழைக் குழந்தைகூட சுகாதாரமாய் இருக்க வேண்டும், இந்த பூமியில் பிறந்த அத்தனை குழந்தைகளும் நன்றாக வளர வேண்டுமென்று தாயுள்ளத்துடன் சிந்தனை செய்து, திட்டம் தீட்டிய ஒரே முதலமைச்சர் நம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான். ஆகவே, ஏழைகளை வாழ வைத்த தெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு தெய்வமாக மாறியிருக்கின்றார்கள். அந்த தெய்வத்தினுடைய ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எத்தனையோ பேர் எனக்கு முன்னாலே அருமைச் சகோதரர் நம்முடைய மாவட்டத்தின் மைந்தன் மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அழகாகக் குறிப்பிட்டார். இந்த ஆட்சி இருக்குமா, இருக்காதா, எத்தனை நாள் எண்ணப்படும் என்றெல்லாம் சொன்னார். ஆகவே, நான் இந்த நேரத்திலே சொல்கின்றேன். இங்கே அமர்ந்திருக்கின்ற இந்த மைந்தன் மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் சகோதரர் சி.வி.சண்முகம் போல் அங்கே அமர்ந்திருக்கின்ற அத்தனை அமைச்சர்களும், இங்கே இருக்கின்ற அத்தனை கழகத் தொண்டர்களும் இருக்கின்றபொழுது, வேறு யாராலும் அசைக்க முடியாது. இந்த ஆட்சி மக்களுடைய ஆட்சி, மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஆட்சி. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும், உயர வேண்டும் என்பதற்காக இரவு, பகல் பாராமல் உழைக்கின்ற ஆட்சி இந்த ஆட்சி, உங்கள் ஆட்சி, உங்களுடைய ஆட்சியை யாராலும் அசைக்க முடியாது. நீங்கள் இருக்கின்றவரை இந்த மண்ணிலே எவராலும் சிந்திக்க முடியாது. அம்மாவினுடைய அரசு தொடர்ந்து சிறப்பான பணிகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, புதிய அறிவிப்புகள். நான் இங்கே வந்தபோதே, இந்த மண்ணின் மைந்தர் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் சகோதரர் திரு சி.வி.சண்முகம் அவர்கள் நீங்கள் எல்லா மாவட்டத்திற்கும் போகின்றீர்கள், எங்கள் மாவட்டத்திற்கும் வந்திருக்கின்றீர்கள், ஏதாவது திட்டம் கொடுக்க வேண்டும். ஏற்கனவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சில திட்டங்களை அறிவித்துச் சென்றார்கள். அதில் பல பிரச்சினைகள் உள்ளது. அதை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அதேபோல, நம்முடைய தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், கழக முன்னோடி நிர்வாகிகள் அத்தனைபேரும் ஒருமித்த கருத்தோடு தெரிவித்தார்கள். அதை நிறைவேற்றிடும் விதமாக இந்த புதிய அறிவிப்பை வெளியிடுகின்றேன்.

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த புதிய அறிவிப்புகள்</u>

<u>விழுப்புரம் மாவட்டத்தில் கடல் நீரை நன்னீராக்கும் புதிய திட்டம்</u>

**விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களிலுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்காக நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

**விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு, ஏற்கனவே கொள்ளிடம் ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தில், தற்போது 140 ஆண்டுகளில் இல்லாத கடும் வறட்சியால் நீர் ஆதாரம் குறைந்துவிட்டதால், விழுப்புரம் மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை முழுமையாக நிறைவேற்றும் வகையில், நிரந்தர தீர்வு காணும் பொருட்டு,**

மாற்று ஏற்பாடாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மரக்காணத்திலிருந்து விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி நகராட்சிகள், உளுந்தூர்பேட்டை, விக்கிரவாண்டி, சங்கராபுரம் பேரூராட்சிகள் மற்றும் உளுந்தூர்பேட்டை, கணை, விக்கிரவாண்டி, திருநாவலூர், மரக்காணம், வானூர் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் 1000 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால் அந்த பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு நிலையான குடிநீர் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, மற்றொரு அறிவிப்பு.

<u>விழுப்புரம் நகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம்</u>

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் ஆசியுடன் விழுப்புரம் நகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். விழுப்புரம் நகராட்சியில் ஏற்கனவே பாதாள சாக்கடைத் திட்டம், நகரின் மையப்பகுதியில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன் விழுப்புரம் நகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதியான பாணாம்பட்டு, சலமேடு, வழுவடத்தி, எருமணந்தங்கள், காரகுப்பம் ஆகிய பகுதிகளுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள

**சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.**

ஆகவே இந்த விழா சீரும் சிறப்புமாக நடைபெறுவதற்கு சிறப்பான ஏற்பாடு செய்த நம்முடைய சட்டத் துறை அமைச்சர் சி.வி.சண்முகம் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய மாவட்ட செயலாளர் குமரகுரு அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நிகழ்ச்சி மிக எழுச்சியோடு, சிறப்போடு நடைபெற வேண்டும் என்பதற்காக, கிட்டத்தட்ட ஒருமாத காலமாக இரவு, பகல் பாராமல் இந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பணி நிறைவு பெறுகின்ற நேரத்திலே, கடந்த இரண்டு நாட்களாக கடுமையான மழை பெய்தது. அந்த மழையையும் பொருட்படுத்தாமல், இந்த அருமையான விழாவை ஏற்பாடு செய்து முடித்து வெற்றி கண்ட சட்டத் துறை அமைச்சர் சி.வி.சண்முகம் அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர் குமரகுரு அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய மனதார உளமார நன்றியை இந்த நேரத்திலே உரித்தாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல. இந்தப் பகுதிக்கு அம்மாவினுடைய அரசு சட்டக்கல்லூரியைக் கொடுத்தது, அதற்குத் தேவையான நிலத்தையும் கொடுத்தது, அதற்குத் தேவையான கட்டிடம் கட்டுவதற்கு 60 கோடி நிதியையும் ஒதுக்கீடு செய்தது. அதேபோல, அரசு கலை மற்றும் மகளிர் கலைக் கல்லூரியும் அம்மா கொடுத்தது, இந்த ஆண்டே துவங்கப்பட்டது. ஆகவே, இத்தனை திட்டமும் இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்று இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்து இந்த சீர்மிகு விழாவிற்கு உழைத்த கழக பிரதிநிதிகளுக்கும், கழக தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், பலவகையியிலும் ஒத்துழைப்பு நல்கிய அரசு

அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே!
நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி!
வணக்கம்!

*****

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**